
## எல்லாரும் சொஸ்தமானார்கள் - பாகம் 1



பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார். அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார். (மத்தேயு 4:23,24)

பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார். (மத்தேயு 9:35)

இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாக் கடலருகே வந்து, ஒரு மலையின்மேல் ஏறி, அங்கே உட்கார்ந்தார். அப்பொழுது, சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்; அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார். ஊமையர் பேசுகிறதையும், ஊனர் சொஸ்தமடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள். (மத்தேயு 15:29-31).

மேற்கண்ட எல்லா வசனங்களிலும், ஆண்டவர் தம்மிடம் வந்த அனைவரையும் சொஸ்தமாக்கினார் என்பதை காணலாம். ஆம், ஆண்டவருடைய அநாதி திட்டத்தில் நோய்களுக்கோ, வியாதிகளுக்கோ, வேதனைக்கோ, மரணத்திற்கோ இடமில்லை. எனவே அவர் சென்ற இடமெல்லாம் ஒருபுறம் அவருடைய வசனத்தை கேட்க மக்கள் வந்தாலும், மறுபுறம் திரளான மக்கள் வந்து வியாதிகளில் இருந்து விடுதலை பெற்றனர். பிறவியிலிருந்து பார்வையற்றவராய், ஊமையராய், முடவராய் இருந்தவர்கள் ஆச்சரியமாய் சுகத்தை பெற்றுக் கொண்டனர். 12 வருட பெரும்பாடுள்ள ஸ்திரீயானாலும், மரித்த நிலையில் இருந்த யவீருவின் மகளானாலும், அடக்கம் பண்ண கொண்டு சென்ற ஏழை விதவையின் மகனானாலும், மரித்து அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாள் ஆன லாசருவானாலும், யாவருடைய சரீரத்திலும் சுகத்தையும், பெலத்தையும், ஜீவனையும் அருள்வதே அவருடைய திட்டமாகும், சித்தமாகும். ஆனால், அதே வேளையில் அவருடன் உறுதியாய் நின்றோர் அனேகர் இல்லை. ஆம் சிலர், 10 குஷ்டரோகிகளில் ஒன்பது பேர் திரும்பி வராமல் போனது போல், சுகத்தைப் பெற்றுக் கொண்ட அவர்கள் நன்றியோடு ஆண்டவரை பின்பற்றி வரவில்லை. அவர்கள் வழியருகே விதைக்கப்பட்டவர்களை போல சென்று விட்டனர். இன்னும் சிலர் அவருடைய ஆழமான, கடினமான உபதேசத்தை புரிந்து கொள்ளாமல், அதில் நிலைத்திராமல் பாதியிலேயே பிரிந்து போயினர். சிலர் யூதாஸ் காரியோத்தை போல, அற்ப காரியங்களுக்கு, உலக மாயைகளுக்கு இடம் கொடுத்து ஆண்டவரை விட்டுச் சென்றனர். ஆனால் சில பேர் மட்டுமே அவருடன் நிலைத்து நின்று, அவருக்காய் வாழ்ந்து முடித்து, நித்திய ஜீவனே சுதந்தரித்துக் கொண்டனர்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், ஆண்டவரிடத்தில் வந்த ஒருவரையும் அவர் வியாதி உள்ளவராக, வேதனையுள்ளவராக, திருப்பி அனுப்பவில்லை. திரளான ஜனத்திற்கு சர்வாங்க சுகத்தை அருளிய தேவன், சில தனிப்பட்ட மனிதர்கள் தம்மை தேடி வந்த போது, அவர்கள் விசுவாசத்தை சோதித்து, அவர்களுடைய விசுவாசத்தின் படி சுகத்தை தந்தார். இதற்கு ஒரு நல்ல உதாரணம், லாசரு வியாதியாயிருக்கிறான் என்று, ஆண்டவருக்கு அவனுடைய சகோதரிகளாகிய மார்த்தாளும் மரியாளும் சொல்லி அனுப்பினாலும், ஆண்டவர் தாம் இருந்த இடத்திலேயே பின்னும் இரண்டு நாள் தங்கினார். இப்படியாக ஆண்டவர் தாமதம் செய்வது போல் தோன்றினாலும், ஆண்டவர் நமக்கு செய்யும் அற்புதமும், அவர் அளிக்கும் சர்வாங்க சுகமும், நாம் அவரில் நிலைநிற்கவும், மகிமையான தேவனுடைய சித்தத்தை, திட்டத்தையும் அறிந்து கொள்ளவும் உதவுகிறது. இவ்வாறு ஆவியிலும், ஆத்துமாவிலும், சரித்திரத்திலும் விடுதலையை பெற்றுக் கொண்டோர் பற்றி பின்வருமாறு தியானிப்போம்.

## 1. குஷ்டரோகி:

**மத்தேயு 8:2,3** வசனங்களில், **“அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.“**. இங்கு ஆண்டவர் “எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு“ என்ற ஒரே வார்த்தையில் அவனுக்கு சுகத்தை அருளினார். காரணம், அவன் அவரை பணிந்து, ஆண்டவரே என்று கூப்பிட்டு, உமக்கு சுத்தமானால் என்னை சுத்தமாக உம்மால் ஆகும் என்று அறிக்கை பண்ணினான். ஆம் அவன் ஆண்டவர் தேவகுமாரன் என்பதை உணர்ந்து, பணிந்து, அவரால் தன்னை சுத்தமாக்க கூடும் என்ற விசுவாச அறிக்கையை செய்தான். அதனால் ஆண்டவர், அவனிடம் ஒன்றையும் கேட்கவில்லை. தம் சித்தபடி சுத்தமாக்க வேண்டிய அவனை, தம் சித்தத்தின் படியே சுத்தமாக்கி அனுப்பினார்.

## 2. நூற்றுக்கு அதிபதி:

**மத்தேயு 8:5-10** வசனங்களில், **“இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து: ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான். அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார். நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான் என்றான். இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.“**. இங்கு நூற்றுக்கதிபதியும் அந்த குஷ்டரோகியை போல, ஆண்டவருடைய தெய்வீகத்தை அறிக்கையிட்டு, அவர் ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால் போதும் தன் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்ற விசுவாச அறிக்கையை செய்தான். மேலும் ஆண்டவர் அவனுடைய விசுவாசத்தை மாத்திரம் அல்ல, அவன் எவ்வாறு தன்னுடைய பாவ நிலைமையை உணர்ந்திருக்கிறான் என்பதை வெளிக்கொணர, “**நான் வந்து அவனைச்**

**சொஸ்தமாக்குவேன் என்றார்**“. ஆனால் அவனோ **“நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல**“, என்று ஆண்டவருக்கு முன் தன்னை தாழ்த்திய அவனுடைய விசுவாசத்தை கண்டு ஆச்சரியப்பட்டு, **“இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை**“ என்று அவனைக் குறித்து ஆண்டவரே சாட்சி கொடுத்தார். அதனால், **“இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.“ (மத்தேயு 8:13).**

### 3. பார்வையற்றோர்:

**மத்தேயு 9:27-30** வசனங்களில், **“இயேசு அவ்விடம் விட்டுப் போகையில், இரண்டு குருடர் அவர் பின்னே சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார்; அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள். அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.“**

இங்கு நாம் காண்கிற இவ்விரண்டு குருடர்களும் ஒன்றை நன்றாய் அறிந்து வைத்திருந்தனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தாவீதின் குமாரன், அவரே இஸ்ரவேலை மீட்டு இரட்சிக்கும் மேசியா என்பதை. அதனால்தான் “எங்களுக்கு இரங்கும்” என்று கூப்பிட்டார்கள். ஆனால், ஆண்டவரோ இங்கு உடனடியாக அவர்களுக்கு அற்புதம் செய்யவில்லை. அவர்களுடைய விசுவாசத்தை சோதிக்கும்படியாய் அவர்களை காத்திருக்க செய்தார். ஆனால், அவர்களோ அவரை விடாது தொடர்ந்து வந்தனர். இறுதியாக, அவர்கள் வாய்மொழி வாயிலாகவே அவர்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட செய்தார். மேலும் “**உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது**“ என்பது, வாயினால் அவர்கள் அறிக்கையிட்ட விசுவாசம், அவர்களுடைய உள்ளான மனதில் எந்தளவுக்கு உறுதியாக உள்ளது என்பதை பொறுத்தது. **“உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது**“ என்பது அவர்களுடைய மனப்பூர்வமான விசுவாச அறிக்கைக்கு சாட்சியாக உள்ளது.

### 4. கானானிய ஸ்திரீ:

**மத்தேயு** 15:21,22 வசனங்களில், **“பின்பு, இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார். அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள்.“**. இங்கு அவ்விரண்டு குருடர்களும் எப்படி ஆண்டவரை தாவீதின் குமாரனே, எங்களுக்கு இறங்கும் என்று கூப்பிட்டனரோ, அவ்வாறே இந்த கானானிய ஸ்திரீயும் ஆண்டவரிடம் இரக்கத்திற்கு, தன் மகளின் விடுதலைக்கு வேண்டி நிற்கிறாள். ஆனால், **“அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.“ (மத்தேயு** 15:23). இங்கு அவ்விரண்டு குருடர்களின் விசுவாசத்தை சோதித்தது போலவே, இவளுடைய விசுவாசத்தையும் ஆண்டவர் சோதிக்கிறார். ஆனால் அவள் ஆண்டவரை விடவில்லை தொடர்ந்து பின் தொடர்ந்தாள். சீஷர்களே ஆண்டவரிடம் வேண்டிக் கொள்ளும் அளவிற்கு அவள் விடாமல் ஆண்டவரை பற்றிக்கொண்டார். ஆனால் ஆண்டவரோ, **“அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல என்றார்.“ (மத்தேயு** 15:24). ஆனால், **“அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்துகொண்டாள்.“ (மத்தேயு** 15:25). இங்கு, அவள் தன் மகளுக்காக எவ்வளவாய் தன்னை தாழ்த்துகிறாள் என்பதை காணலாம். ஆனால் ஆண்டவரோ தொடர்ந்து அவளை சோதித்தார். **“அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்.“ (மத்தேயு** 15:26). ஆனால் ஆண்டவர் இப்படி கூறிய பின்பும், தன்னை மேலும் தாழ்த்தி, **“அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்.“ (மத்தேயு** 15:27). இதனைக் கேட்ட ஆண்டவர், எவ்வாறு இஸ்ரவேலுக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் காணவில்லை என்று நூற்றுக்கு அதிபதியை புகழ்ந்தாரோ, அவ்வாறே, **“இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.“ (மத்தேயு** 15:28). ஆம் அவளுடைய விசுவாசம், சாதாரண விசுவாசமல்ல, அது பெரிய, உயர்ந்த விசுவாசம். அதனால்

ஆண்டவர், "நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார்". ஆம், அவள் விரும்பியதெல்லாம் தன் மகளின் விடுதலை மட்டுமே. அதை அந்நேரமே, அவளின் விசுவாச அளவின்படி, அவளுக்கு அருள் செய்தார் நம் ஆண்டவர்.

### 5. ஜெப ஆலயத் தலைவனாகிய யவீரு:

**லூக்கா 8:41,42** வசனங்களில், **"அப்பொழுது ஜெபஆலயத்தலைவனாகிய யவீரு என்னும் பேருள்ள ஒருவன் வந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்தபடியால், தன் வீட்டிற்கு வரும்படி அவரை வேண்டிக்கொண்டான். அவர் போகையில் திரளான ஜனங்கள் அவரை நெருக்கினார்கள்."**.

இங்கு அந்த கானானிய ஸ்திரீயை போல, ஜெப ஆலய தலைவனாகிய யவீரு என்பவனும், ஆண்டவரின் பாதத்தில் விழுந்து, தன் 12 வயதுள்ள மகளுக்காக மன்றாடுகிறான். ஆண்டவரும் அவன் வேண்டுதலை கேட்டு அவன் வீட்டிற்கு சென்றார். செல்கின்ற வழியில் மற்றொரு அருமையான சுகத்தையும் ஆண்டவர் 12 வருட பெரும்பாடுள்ள ஸ்திரீக்கு செய்கிறார்.

### 5(அ) 12 வருட பெரும்பாடுள்ள ஸ்திரீ:

**"அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்து, தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஒரு ஸ்திரீ, அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; உடனே அவளுடைய பெரும்பாடு நின்றுபோயிற்று." (லூக்கா 8:43,44).** இங்கு 12 வயது மகளுக்காக யவீரு வேண்டி நிற்கையில், 12 வருடமாய் வியாதியின் வேதனையில் மருத்துவராலும் குணப்படுத்த முடியாத நிலையில், சரீரத்தில் வேதனையோடும், அதே நேரத்தில் மற்றவர் முன்பு தன் வியாதியின் வேதனையை கூட சொல்ல முடியாத நிலையில், அவள் செய்ததெல்லாம் ஒன்றுதான். விசுவாசத்தோடு ஆண்டவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டாள். அற்புதமாய் சுகத்தைப் பெற்றுக் கொண்டாள். சர்வ வல்லமையுள்ள ஆண்டவருக்கு இது தெரியாதது அல்ல. ஆகிலும், அவள் எல்லார் முன்பும் சாட்சி பகர்வதற்கு, ஒரு வாய்ப்பை ஆண்டவர் தந்தார். **"அப்பொழுது இயேசு: என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். எங்களுக்குத் தெரியாதென்று எல்லாரும் சொன்னபோது, பேதுருவும் அவனுடனே கூட இருந்தவர்களும்: ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே, என்னைத் தொட்டது யார் என்று எப்படிக் கேட்கிறீர் என்றார்கள். அதற்கு இயேசு: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்;**

**ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்." (லூக்கா 8:45,46).** இங்கு நாம் காண வேண்டிய முக்கியமான காரியம், திரளான ஜனங்கள் ஆண்டவரை சூழ்ந்து நெருக்கி கொண்டிருக்க, வியாதியின் மத்தியில், பெலவீனத்தின் மத்தியில், அவள் அந்த திரளான கூட்டத்தில் மத்தியிலும், ஆண்டவரண்டை வந்து, அவருடைய வஸ்திரத்தை தொட்டாள் என்றால், அவள் எவ்வளவாய் ஆண்டவர் நிச்சயமாய் தன் வியாதியை நீக்குவார் என்ற நம்பிக்கையோடு, என்ன ஆனாலும் பரவாயில்லை என்றே, அந்த திரளான கூட்டத்தின் நடுவே, சரீரத்தில் பல இன்னல்களை அனுபவித்து இருந்தாலும், இறுதியில் தன் விசுவாசத்தில் உறுதியுள்ளவள்ளாய் ஆண்டவரை தொட்டாள். இதனை அறிந்த ஆண்டவர், அவள் வாய் திறந்து தன் பிரச்சினையை கூறும் முன்பே அவளுக்கு சுகத்தை அருளினார். **"அப்பொழுது அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்கவில்லையென்று கண்டு, நடுங்கிவந்து, அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும் உடனே தான் சொஸ்தமானதையும் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள். அவர் அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்." (லூக்கா 8:47,48).** இங்கு அவள் தன் சாட்சியை கூறின பின்பு, ஆண்டவர் அவருடைய விசுவாசத்தை பாராட்டி, அதுவே அவளை இரட்சித்தது என்று கூறி, அவளை சமாதானத்தோடு அனுப்பி விட்டார்.

இவை எல்லாவற்றையும் ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு பார்த்துக் கொண்டிருக்கிறான். ஒருவகையில் இது அவனுடைய விசுவாசத்தை பெருகு செய்திருந்தாலும், அவனுடைய எண்ணம் எல்லாம் தன் மகள் மீதே இருந்தது. **"அவர் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், ஜெபஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து, அவனை நோக்கி: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றான்." (லூக்கா 8:49).** இங்கு யவீருவுக்கு துக்ககரமான செய்தி வருகிறது. அவன் அந்த நிலையில் உடைந்து போயிருப்பான். ஆனால் ஆண்டவரோ, **"இயேசு அதைக் கேட்டு: பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார்." (லூக்கா 8:50).** இங்கு ஆண்டவரே யவீருவின் விசுவாசத்தை திடப்படுத்துகிறார். **"அவர் வீட்டில் வந்தபோது, பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் பெண்ணின் தகப்பனையும் தாயையும் தவிர வேறொருவரையும் உள்ளே வரவொட்டாமல், எல்லாரும் அழுது அவளைக்குறித்துத் துக்கங்கொண்டாடுகிறதைக் கண்டு: அழாதேயுங்கள், அவள் மரித்துப்போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அவள் மரித்துப்போனாளென்று**

**அவர்கள் அறிந்ததினால், அவரைப் பார்த்து நகைத்தார்கள்." (லூக்கா 8:51-53).** இங்கு ஆண்டவர் மற்றவரின் நகைப்பை குறித்து கவலைப்படவில்லை. தான் அற்புதம் செய்வதற்கு, யவீருவின் மற்றும் அவனுடைய மனைவியின் விசுவாசத்தை மட்டும் எதிர்பார்த்தார். அவர்களும் உடைந்து போகாமல், தன் உறவின் முறையாரின், அயலகத்தாரின் செயலை எண்ணாமல், ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு பின் சென்றனர். அதன் முடிவு, **"எல்லாரையும் அவர் வெளியே போகப்பண்ணி, அவளுடைய கையைப் பிடித்து: பிள்ளையே எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது; உடனே அவள் எழுந்திருந்தாள்; அவளுக்கு ஆகாரங்கொடுக்கக் கட்டளையிட்டார். அவள் தாய்தகப்பன்மார் ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது நடந்ததை ஒருவருக்கும் சொல்லாமலிருக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்." (லூக்கா 8:54-56).** இங்கு ஆண்டவர், அந்த சிறு பெண்ணை அவர் கூறியபடியே சாதாரண தூக்கத்திலிருந்து எழுப்புவது போல, அவளுக்கு மறுபடியும் ஜீவனை தந்து, அவள் சரீரத்தில் சோர்வுற்றிருப்பதை அறிந்து, அவளுக்கு ஆகாரம் கொடுக்க சொன்னார். யவீருவும் அவன் மனைவியும் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். குறிப்பாக, யவீரு தன் மகளுக்காக ஆண்டவரிடம் சென்ற நிலையையும், வழியில் நடந்த நிகழ்வுகளையும், எல்லாம் முடிந்து போயிற்று என்ற நிலையிலும் ஆண்டவர் தன்னை திடப்படுத்தியதால், விசுவாசத்தோடு அவரை தன் வீட்டிற்கு அழைத்து வந்த சூழ்நிலையையும், இப்பொழுது தன் மகளோடு சந்தோஷமாய் ஆண்டவரை வழிவிட்டு அனுப்பும் நிலையையும் கண்டால், சில மணி நேரத்தில் அவன் வாழ்வில் நடந்த காரியங்கள், அவனை நித்தியமாய் கிறிஸ்துவில் நிலைத்திருக்க செய்தது.

தொடர்ந்து நாம் இவ்வாறு அற்புதமாய் ஆண்டவரிடத்தில் சுகம், விடுதலை பெற்றோரை பற்றி அடுத்த பாகத்தில் தியானிப்போம். ஆண்டவர் அருளும் சுகத்தில் வித்தியாசமான அனுபவங்கள் இருந்தாலும், நிச்சயமாய் தம் மண்டை வந்த ஒவ்வொருவரையும் அவர் சுகப்படுத்தினார். எல்லாரும் சொஸ்தமானார்கள். ஆமென், அல்லேலுயா.